ISSN : 2456-821X அவையம் 3(2) Nov.2019 P.No. : 68-76




# “காலந்தோறும் நடுகற்களும் பண்பாட்டு முறைகளும்”

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ்**
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 620 002,

***கட்டுரை பெறப்பட்டது : 30.10.2019*** ***ஏற்கப்பட்டது : 29.11.2019***

=====================================================================

**முன்னுரை:**

தமிழ் முதுமகளின் அமிழ்துறழ் மொழியை உற்று நோக்குங்கால் மனிதர்கள் தம் இனத்திற்குச் செய்த நற்செயல்களிளும், வீர செயல்களும் இந்த உலகம் உள்ளவரை அச்செயல்கள் நின்று நிலவவேண்டும். என்ற எண்ணம் பழங்கால மக்களிடையே நிலவி வந்தமையை நடுகற்கள் வழி நாம் அறிய முடிகிறது. அப்படிப்பட்ட நடுகற்கள் பழங்காலம் தொட்டு தற்காலம் வரை எவ்வாறு போற்றியும் பாதுகாத்தும் பெயரிட்டு அழைத்தமையும் பற்றிய செய்திகளை அறிவோம்.

**கலைச்சொற்கள் (Key - words)**

நினைவுக்கல் - Memory Stones, சிதையில் - நெருப்பில், வானவமங்கையர் - அப்சரப்பெண்கள், இறைவனுக்குப் பூசை செய்பவன் - பூசகன், மூன்று சாலை சந்திக்குமிடம் - மூச்சந்தி, பெரும்பற்றப் புலியூர் - சிதம்பரம்

**நடுகல் என்பதன் பொருள்:**

மதுரைத் தமிழ்ப் பேரகராதி 'நடுகல்' என்பதற்கு இறந்த வீரர்களுக்கு அறிகுறியாக நடும் கல் என்றும் உழவர்கள், நட்டக்கல் எனவும் குறிப்பிடுகின்றன. மெய்ப்பன் தமிழ் அகராதி போரில் இறந்துபட்ட வீரனைத் தெய்வாக நிறுத்தும்கல் என்றும், பிரிட்டானிகா தகவல் களஞ்சியம் (Memory Stones) பண்டைக் காலத்தில் போர்களத்தில் (தென்னிந்திய வழக்கப்படி) மரணம் அடைந்த வீரருக்கு அவர் வீழ்ந்த இடத்தில் நடப்பட்ட வழிபாட்டுக்கல். வீரக்கல், நினைவுக்கல் எனவும் குறிக்கப்படும். வாழ்வியற்களஞ்சியம் 'நடுகல்' பற்றி பண்டைக் காலத்தில் போர்க்களத்தில் பெருவீரம் காட்டிப் போர்புரிந்து வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு, அவன் வீழ்ந்த இடத்தில் நடுகல் நட்டு வழிபடும் வழக்கம் இருந்தது. இதனை வீரக்கல் நடுதல் என்று குறிப்பிடுவர். நினைவுக்கல் என்றும் குறிப்பிடும் வழக்கம் இருந்துள்ளமை புலனாகிறது,

**இலக்கியத்தில் நடுகல்:**

இலக்கியத்தில் நடுகல் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியம் முதலாவதாகப் பிற்கால இலக்கிய நூல்களிலும் இதற்கான இலக்கணம் பேசப்பட்டுள்ளது. அதில் தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் நடுகல் வழிபாட்டு வளர்ச்சியைத் தெளிவாகச் சுட்டுகின்றன.

**"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்"**

என்னும் **தொல்காப்பிய** நூற்பாவினால் புறங்காட்டாது போர் செய்து பட்ட வீரருக்குக் கல்நடுதல் என்பது பெறப்படும் என்ற செய்திகளும், **புறப்பொருள் வெண்பாமாலையில்**,

**"அவன்பெயர் கல்மிசைப் பொறித்துக்**
**கவின்பெறக் கல்நாட் டின்று"**

என்று குறிப்பிடுவதினாலும், **புறநானூற்றுச்** செய்யுள் அடியில்,

**"அணிமயிற் பீலிசூட்டிப் பெயர்பொறித்து**

**இனி நட்டனரே கல்லும்”**

எனக்காணப்படும் பாடல் வரிகளினாலும்,

**-ஆடவர்**

**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**

**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்”**

என்ற **அகநானூற்று** செய்யுளினாலும் செவ்வியல் இலக்கியத்தில் காணலாகும் நடுகல் பற்றிய செய்திகள் காணலாகின்றன. இருப்பினும் போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு மட்டுமின்றி நற்செயல் செய்தவர்களுக்கும் கோயில் கட்டியவர்கள் போன்றோருக்கும் இவை எழுப்பப்பட்டன. மனிதர்களுக்கு மட்டுமின்றி செயற்கரிய செயல்களைப் புரிந்த விலங்குகளுக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை என்ற இலக்கண நூல்களில் நடுகல் வழிபாட்டு முறை வளர்ச்சி அடைந்த நிலையை அறியமுடிகிறது. மேலும், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியைச் சேர்ந்த நடுகற்கள் பல தொல்பொருள் ஆராய்ச்சியாளரர்களின் உதவியால் கிடைத்துள்ளன.

**நடுகற்களின் வகைகள்:**

தொட்டமாள் சிக்கமாள் நடுகல், சதிக்கல், பிராமண நடுகல், நவக்கண்ட நடுகல், வல்லான் பதுக்கை நடுகல், யானைக்குத்திப்பட்டான் நடுகற்கள், புலிக்குத்திப்பட்டான் நடுகற்கள், நிசீதிகைக்கல், மறவர்கல், கோழிக்கற்கல், கோவுக்கல், பள்ளிப்படை மற்றும் நினைவுத்தூண் என பலவகைப்படும்.

**தொட்டமாள் சிக்கமாள் நடுகல்:**

இந்த தொட்டமாள் சிக்கமாள் என்னும் நடுகல் தேன்கனிகோட்டைப் பகுதியல் குரும்பர் இனமக்களின் வழிபாடு செய்யும் கோயிலாகக் காணப்படகிறது. இந்த இரண்டு கற்களும் இருவிதமான உணர்வுகளை வெளிப்படுத்தும் மாதிரி நடுகல் சிற்ப முறையில் செதுக்கப்பட்டுள்ளன என்று அறம் கிருஷ்ணன் குழுவினரால் அறியப்பட்டுள்ளது.

**சதிக்கல்:**

சதிக்கல் எனப்படுவது கணவன் இறந்தவுடன் அந்த நெருப்பில் (சிதையில்) மனைவியும் உடன்கட்டை ஏறும் பெண்ணிற்கு வைப்பதாகும். இந்தச் சதிக்கல் திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூரிலிருந்து ஆத்தூர் செல்லும் சாலையின் இடது புறத்தில்

பழமையான இடிந்த கோயில் ஒன்று உள்ளது. இது நாயக்கர் காலத்தைச் சார்ந்தது என்றும், 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததென்றும் குறிப்பிடுகின்றனர். இந்தக்கோயிலின் மண் மண்டபத்தில் 700 ஆண்டுகள் பழமையான சதிக்கல் காணப்படுகிறது. இதனைப்பற்றிய செய்திகள் முற்காலத்தில் ஆண் மகன் வீரச்செயல் புரிந்து இறந்ததால் அவன் இறந்த இடத்தில் நடுகல் நடப்பட்டு வழிபடப்படும் என்றும், அந்த வகையில் கணவன் இறந்ததும் மனைவியும் தீக்குளித்து இறந்து விடுவதும் உண்டு. அவ்வாறு இறந்த பெண்ணின் நினைவாக நடப்படுவதுதான் சதிக்கல் ஆகும். இந்தச் சதிக்கல்லின் அமைப்பு முறை ஒரு ஆண்சிற்பம் தலைப்பாகையோடு நடுவில் அமர்ந்த நிலையில் தனது இடக்கால் மடித்தவாறும் வலதுகையால் இடதுபுறத்தில் வாளை பிடித்த நிலையிலும் காதில் வளையம் அணிந்த நிலையிலும் காணப்படுகிறது. அதுமட்டுமின்றி இந்த சதிக்கல் சிற்பத்தின் இருபுறங்களிலும் இரு பெண்கள் அமர்ந்த நிலையில் ஒருகையில் மலர் ஏந்தியவாறும் புடைப்பு சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சதிக்கல்லின் மற்றொரு அமைப்பற்றி தஞ்சை தமிழ்ப் பல்கலைகழகத்தைச் சார்ந்த தொல்லியல் ஆய்வாளர் பாபு குறிப்பிடுகையில் சதிக்கல்லில் ஆண் உருவம் இருக்கும் தீப்பாய்ந்து இறந்த வீரனின் மனைவியின் உருவம் இருக்கும் அதே, போன்று மூன்று பெண்களின் உருவங்கள் ஒரே கல்லில் இருக்கும். இரண்டு பெண்களின் நடுவில் இறந்த வீரனின் உருவம் சில கற்களில் இடம்பெற்றிருக்கும். இதுபோன்ற கற்களின் அருகே மூன்று பெண்கள் கைக்கூப்பி இருப்பது போன்று கல்லில் செதுக்கப்பட்டு இருக்கும் இவர்களை வான மங்கையர் (அப்சரப்பெண்கள்) என்பர். இறந்தவர்களை வான மங்கையர் கைகூப்பபி வீரர் உலகிற்கு அழைத்துச் செல்வர் என்ற நம்பிக்கையில் இவ்வகைக் கற்களில் இவர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த வகையான சதிக்கலிற்குக் கோயில் கட்டி வழிபட்டுள்ளதை அறியமுடிகிறது. மேலும், இந்த சதிக்கல் கருநாடக மாநிலத்தில் தான் மிக்க அளவில் காணப்படுகிறது. குணவன் இறந்தபோது மனைவி உடன் கட்டையேறிய நினைவாகச் சதிக்கற்கள் எடுக்கப்பட்டன. கருநாடக மாநிலத்தில் இவை ‘மகாசதிக்கல்’ என்னும் ‘உறாசன தோளுகல்லு’ என்றும் சொல்லப்பட்டன. இவை கேரள மாநிலத்தில் புலச் சிக்கல் என்றும் குசராத் பகுதியில் ‘பாலியா’ என்றும் சொல்லப்படுகின்றன. இக்காலத்தில் ‘வீர மார்த்தி கோயில்’ வீரமரணர்த்தி கோயில்’ என்றும் கூறப் பெறுகின்றன என்று வாழ்வியற்களஞ்சியம் சான்று பகர்கின்றன. இதன் தொடர்பான

செய்தியைப் பற்றி **தொல்காப்பியர் புறத்திணையியலில்** கணவன் இறந்தவுடன் மனைவி தீப்பாய்ந்து இறந்த நிலையை,

**"நல்லோள் கணவனொடு நளி அழல் புகீஇச்"**

என்று குறிப்பிட்டுள்ளமை ஒப்புநோக்கத்தக்கதாகும்.

**பிராமண நடுகல்:**

இந்த பிராமண நடுகல்லின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகும். பிராமணர்கள் படைத்தலைவர்களாக இருந்த செய்தியும், ஒரு கோயிலின் மேலாளரான தன் ஆசிரியனைப் பூசகன் தாக்கிக் கொல்ல வந்தபோது அவருடைய மாணக்கன் அதை தடுக்க முற்பட்டுள்ளான். அதனால் ஆத்திரம் கோயில் இறைவனுக்குப் பூசை செய்பவன் (பூசகன்) மாணக்கனைக் கொன்றுள்ளான். அவனது வீரத்தை மெச்சி அவனது ஆசான் வீரக்கல் நட்டுள்ளார். இது மிக அரிதான செய்தியாகக் காணப்படுகிறது. இது திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி வட்டம் சென்னிவாய்க்கால் என்னும் ஊரில் உள்ள சிவன் கோயில் கோபுர வாயிலில் இந்த நடுகல் உள்ளது.

**நவக்கண்ட நடுகல்:**

பிறர் நலன் கருதி ஆண்மகன் தனது இன்னுயிரைத் தாமே தற்கொலையாகத் தெய்வத்தின் முன்பாக பலியிடுவதாகும். இதனைத் தமிழில் தலைப்பலி என்றும் குறிப்பிடுவர். தமது உடலை ஒன்பது துண்டுகளாக அல்லது ஒன்பது பாகமாக கூர்மையான வாளால் வெட்டிக்கொள்ளவது நவகண்டமாகும்.

**வல்லான் பதுக்கை நடுகல்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் முசிறி அருகே மண்பறை கிராமத்தில் 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வல்லான் பதுக்கை நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் ஆய்வாளர் பாபு குறிப்பிட்டுள்ளார். முண்பறை கிராமத்தின் கிழக்கே உள்ள சிற்றோடையின் கறையில் (வண்ணான் குட்டை) அமைந்துள்ளது. அந்த நடுகல்லின் அமைப்புமுறையானது தலையில் குடுமியுடனும் முறுக்கிய மீசையுடனும் காதில் குண்டலங்களுடனும் தனது இடக்கையை இடுப்பில் வைத்துள்ள நிலையில் காணப்படுகின்றது.

**யானைக்குத்திப்பட்டான் நடுகற்கள், புலிக்குத்திப்பட்டான் நடுகற்கள்:**

இந்த இரண்டு நடுகற்களும் தமிழகத்தின் கோவை மாவட்டம் கிணத்துகடவு பகுதியின் வடமேற்கே 6 கி.மீ உள்ள கல்லாபுரத்தில் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்னாள்

கிடைத்தவையாகும். இவை இருக்குமிடம் மூன்று சாலை சந்திக்கும் இடத்தில் இருப்பதால் பண்டைய சந்தி வழிபாட்டு முறையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

யானைக்குத்திப்பட்டான் கல் என்பது மலைப்பகுதியிலிருந்து ஊருக்குள் புகும் யானைத்தடுத்து, அவ்வூரில் உள்ள பயிர்கள், கால்நடைகள், மக்களைக் காப்பதற்காகப் பழங்காலத்தில் சிலரை தெரிவு செய்துள்ளனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்கள் ஊருக்குள் வந்த யானையுடன் போரிட்ட வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடப்பட்ட கல்லே யானைக்குத்திப்பட்டான் கல்லாகும்.

அதேபோல, கால்நடைகளை உணவாக உட்கொள்ளவரும் புலியுடன் போரிட்டு வீரமரணம் அடையும் வீரருக்கு எடுக்கப்படும் கல் புலிக்குத்திப்பட்டான் கல் எனப்படும். இந்த இரண்டு நடுகற்களிலும் வீரர்களின் அமைப்பு வீரர்களின் அள்ளிமுடிந்த குடுமி நேராக உள்ளது. இடையில் ஆடை கை, கால், காது, கழுத்து பகுதியல் அணிகளன் அணிந்துள்ளனர்.

**நிசீதிகைக்கல்:**

சமணப் பெரியவர்கள் சல்லேகனை விரதம் இருந்து உயிர் விட்டால் அவர்களுக்கு ‘நிசீதிகைக்கல்’ என்ற நினைவுக்கல் நடுவது வழக்கம் இதையே நிசீதிகைக்கல் என்று அழைப்பர்.

**மறவர்கல்:**

பொற்பனைக் கோட்டையில் கிடைத்த நடுகல் இது முக்கோண வரிவடிவில் அமைந்துள்ளது. இதில் ஐந்து வரி செய்திகள் இடம்பெறுகின்றன. (கடைசி இரண்டுவரி தெளிவாகப் படிக்க முடியவில்லை) இது நாள் வரை பொ. ஆ. மு 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துப்பொறிக்கப்பட்ட இருளப்பட்டி நடுகல்லே காலத்தால் முந்தியது என்ற கூற்று மாற்றப்பட்டுள்ளதாகவும், இந்த நடுகல் இந்தியாவின் தொன்மையான நடுகற்கள் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளது எனலாம்.

**கோழிக் கற்கள்**

கோழிச் சண்டையில் உயரி நீத்த கோழிகளுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவையே கோழிகற்கள் என வழங்கப்பெறுகின்றன.

**கோவுக்கல்**:

கோவுக்கல் என்ற பெயரில் அமைக்கப்பட்ட கற்கள் தமிழக கிராமங்களில் ‘கோயில் மாடு’ இறந்தவுடன் அதனைப் புதைத்த இடத்தில் நடப்படும் கல் என அறியமுடிகிறது. இல்லையென்றால் அதே இடத்தில் கல்வெட்டு ஒன்றை வைத்து தற்காலத்தில் இறந்த மாட்டின் பெருமைகளைப் பொறித்து வைத்தல் ஆகும். இதுபோன்ற கல்வெட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் ஒன்றியம் கோட்டரப்பட்டியில் மாரியம்மன் கோவிலைச் சார்ந்த காளைமாட்டிற்கு அந்த மாடு புதைக்கப்பட்ட இடத்தில் கல்வெட்டு ஒன்று வைக்கப்ட்டுள்ளது. இந்த கோயில் மாடு புதைக்கப்பட்ட இடத்தில் ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் மாட்டு பொங்கல் அன்று அந்த நினைவிடத்தில் வாழிபாடு நடத்தப்பட்டு மற்ற மாடுகளைத் திறந்து விடும் (மஞ்சு விரட்டு) வழக்கம் இன்றளவும் நடைபெற்று வருகிறது.

**பள்ளிப்படை:**

இச்சொல் பள்ளிப்படையாகவும் வழங்கப்பெறும். இறந்த மன்னரின் நினைவிற்கு அறிகுறியாக அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தின்மீது கட்டப்பட்ட கோயில் என்பது இதன் பொருள். இந்த செய்திகளை முதலாம் இராசராச சோழன் கல்வெட்டின் மூலமாக அறிய முடிகிறது. இதில் ஆற்றூர்த் துஞ்சினதேவர் என்ற தொடரால் இவர், முதற்பராந்த சோழனது மூன்றாவது மகன் அரிஞ்சயன் எனத்தெளிவாகிறது. இவர் ஆற்றூர் என்னுமிடத்தில் இறந்த காரணம்பற்றி ஆற்றூர்த் துஞ்சிய தேவர் என்று அழைக்கபட்டுள்ளார். இவரது பெயரால் முதலாம் இராசராச சோழன் வடார்க்காடு சில்லாவில் திருவல்லத்திற்கு வடக்கே ஆறு மைல் தொலைவிலுள்ள மேற்பாடி என்னும் ஊரில் இவர்க்குப் பள்ளிப்படையாக அரிஞ்சய ஈச்சரம் என்னும் கோயிலைக்கட்டியுள்ளான் என்று சுந்தரேச வாண்டையர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி முதலாம் பராந்தச்சோழன், தன் தந்தை முதலாம் ஆதித்தன் புதைக்கப்பட்ட இடத்தில் கட்டுவித்த கோயில், பள்ளிப்படையாகிய ஆதித்தேச்சரம் என்னும் பெயரையும், முதாம் இராசராச சோழனது மனைவியாகி பஞ்சவன் மாதேவியார் பழையாறையாகிய முடிகொண்ட சோழபுரத்தில் புதைக்கபட்டுகட கட்டப்பட்டகோயில் பள்ளிப்படையாகிய பஞ்சவன் மாதேவீச்சரம் என்னும் பெயரையும், விக்கிரமசோழ தேவரின் தமக்கையார் பெரும்பற்றப் புலியூர்க்கு (சிதம்பரத்திற்கு) அருகில் புதைக்கப்பட்ட இடம் அக்கன்பள்ளிப்படையாகிய விக்கிரமசோழ நல்லூர் என்னும் பெயரையும் பெற்றுள்ளமை கல்வெட்டுகளில்

இறந்தவர்களுக்கு கோயில் கட்டி வழிபாடு நடத்தும் பண்பாடு இடைக்கால மக்களிம் காணப்பட்டதை அறியமுடிகிறது.

இதேபோல், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கும் தனது தாய்க்கும் கல் நட்டதனைச் சிலப்பதிகாரச் செய்திகள் சான்று பகர்கின்றன. வடக்கிருந்து இறந்தபோது கோப்பெருஞ்சோழனுக்கு நடப்பட்ட கல் பற்றி புறநானூறு குறிப்பிவதும் ஒப்பிட்டு நோக்கும் நிலையில் உள்ளன.

**நினைவுத்தூண்:**

நினைவுத்தூண் என்பது செவ்வியல் காலத்தில் தமது இனக்குழு மக்களைக் காத்தல் பொருட்டும் நன்மைசெய்தன் பொருட்டும் நடுகல் வைத்தமைபோன்று, தற்காலத்தில் நாடுகளுக்கு இடையிலான போர் அந்தபோரில் தன் உயிரை துச்சமாகக் கருதி பல சாதனைகள் படைத்து இறந்துபட்ட வீரர்களுக்கு அமைப்பது தான நினைவுத்தூண் அதனோடு மட்டும் அல்லாமல் கிராமபுறங்களில் தமது ஊர்மக்களின் நலன் காக்கும் பொருட்டும், ஆற்றில் தண்ணீர் வேண்டியம் தன்னுடைய உயிரை தியாகம் செய்தவர்களுக்கும் அவர்களின் நினைவாக அமைக்கப்படுவதாகும். இதேபோன்ற நினைவுத்தூண் திருச்சிராப்பள்ளி மாவட்டம் புள்ளாம்பாடி வாய்க்காலில் வேளாண்மை சிறக்கவேண்டும் என்பதற்காக தண்ணீர் வேண்டி நடந்த போராட்டத்தில் இருவர் உயிர் நீத்தனர் அவர்களுக்காக வைக்கப்பட்ட நினைவுத்தூண் சான்றாகும்.

**முடிவுரை:**

செவ்வியல் காலம் தொட்டு நடுகல் வழிபாடு இனக்குழுமக்களிடம் மட்டுமே காணப்பட்ட ஒன்றாகக் கருதவேண்டியுள்ளது. இதைத்தவிர செவ்வியல் கால மக்களிடம் சிறுதெய்வ வழிபாடு மட்டும் இருந்தமை செவ்வியல் காலம்தொட்டு தற்காலம் வரை இருந்த பண்பாட்டுச் செய்திகளை உணரமுடிகிறது. சேவ்வியல் காலத்தில் நடுகல் வழிபாடு என்பது நடுகல்லைச்சுற்றி வேல், அம்பு, மயிற்பீலி மற்றும் கற்றாழையினால் ஆன மாலைகள் அணிவிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்ட நிலையும். இடைக்காலத்தில் நற்செயல்கள் செய்த மனிதற்கள் மட்டும் அல்லாமல் விலங்குகளுக்கும் நடுகற்கள் வைத்தமையும் அவற்றைச் சிறப்பித்தமையும், புலப்படுகிறது. மேலும், தற்காலத்தில் நினைவுசின்னம், நினைவுத்தூண் என்ற அமைப்பில் நடுகல்லின் தொடர்நிலை காணப்படுகிறது.

1. பெ. அர்த்த நாரீசுவரன்,
கல்வெட்டுவழிப் பண்பாட்டியல்,
ராமையா் பதிப்பகம்,
ஜி-4, சாந்தி அடுக்கம்,
3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தொரு,
ராயப்பேட்டை சென்னை – 600 014,
2016.
2. தி. தண்டபாணி,
புறப்பொருள் கதாட்சிகள்,
நான்மணிப் பதிப்பகம்,
31, 26ஆம் குறுக்குத் தெரு,
பெசண்ட் நகர், சென்னை – 600 090. 2001.
3. பொ. வே. சோமசுந்தரனார் (உ.ஆ)
அகநானூறு – (மணிமிடைபவளம், நித்திலக்கோவை),
தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட்,
சென்னை – 1,
1973.
4. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை,
புறநானூறு -1, 2
செவ்வியல் கருவூலம் (சங்க இலக்கியம்),
தமிழ்மண் அறக்கட்டளை,
"பெரியாா் குடில்",
செவாலியே சிவாசி கணேசன் சாலை,
தியாகராயா் நகர்,
சென்னை – 600 017,
2018.
5. பொ.வே சோமசுந்தரனார்,
புறப்பொருள் வெண்பாமாலை,
திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
154, டி, டி கே சாலை, சென்னை – 14.
2002, 2004.
6. வை. சுந்தரேச வாண்டையார்,
முப்பது கல்வெட்டுகள்,
பழனியப்பா பிரதா்ஸ்,
திருச்சி – 620 002.